# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 159/மா/2025
நாள் 26.03.2026

ஏ. செல்வராஜ் என்கிற RTI செல்வம்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 5
பெரு நகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. செல்வராஜ் என்பவரின் 27.03.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.03.2025 அன்று பெறப்பட்டு 159/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. செல்வராஜ் என்பவர் 27.03.2025 நாளிட்ட தனது மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் வருவாய் அலுவலருக்கு முகவரியிட்ட 26.03.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 54, 56 வார்டு–ல் பணியாற்றி வரும் பாண்டுரங்கம் (LI) என்பவர் GAIETY TRAVELS இதன் மூலமாக Professional tax மற்றும் செலுத்தி விட்டு D.D. ரூபாய் 63020/– உண்டான கடந்த 11.09.2024–ம் தேதி பெற்றுக் கொண்டு சென்றார். ஆனால் இந்நாள் வரை உரிமம் வழங்கவில்லை. ஆனால் உரிமத்தை சரிப்பார்த்ததாக A.R.O. முருகபாலாஜி அதன் படிவத்தை தங்களிடம் அனுப்பி வைத்தார். வார்டு எண் 63 பில் எண் 05902 அதன் அடிப்படையில் இன்னாள் வரை உரிமத்தை வழங்காமல் ஏமாற்றி வருகிறார். அதன் D.D. வைத்து பாண்டுரங்கம் மற்றும் முருகவேல் பாலாஜி அதை வைத்து ஏதேனும் தவறான முறையில் பயன்படுத்த வாய்ப்புள்ளது. அதே போல் Nahib Khan மற்றும் Peer Mohammed அல்லாமல், Chandra Motors Private Limited, Rabbani Auto Stores, Thameem Auto Spare, Advik Automobiles, S. Sheik Mathax, Abdul Nazer, Bilal. P போன்ற நிறுவனங்களில் இருந்து 10,000/– முதல் 1,00,000/– வரை D.D. பெறப்பட்டுள்ளது. இந்த அனைத்து D.D.–களும் யாரிடம் போகிறது இந்த பணம் தவறாக பயன்படுத்தி வருகிறதா. எனவே சம்பந்தப்பட்ட பாண்டுரங்கம் மீதும் ஏ. ஆர். முருகபாலாஜி மீதும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள புகார் மனு நடவடிக்கை எடுக்க மீறும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் முறையாக வழக்கு தொடர்ந்து தங்கள் பதவிகளை பறிக்க இதுவே போதுமான ஆவணங்கள் ஆகும். அதேபோல் மனுதாரரை திசை திரும்பும் நோக்கிலும் மற்றும் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள விட்டாலும் காலதாமதம் ஏற்பட்டாலும் சாட்சிய சட்டத்தின்படி தன் தவறை ஒப்புக் கொண்டதாக கருதி

உரிய நீதிமன்றத்தில் பிரதிவாதியாக அனைத்து அதிகாரிகளும் வழக்கில் சேர்க்க நேரிடும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் வருவாய் துறையில் பணிபுரிந்த முன்னாள் உரிமம் ஆய்வாளர் மற்றும் தற்போது மண்டலம் 13–ல் பணிபுரிந்து வரும் உரிமம் ஆய்வாளர் திரு. கு.பாண்டுரங்கன் என்பவர் மேற்கண்ட மனுதாரர் மனு குறித்து தன்னுடைய 18.06.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"வணக்கத்துடன் எழுதுவது யாதெனில் 23.05.2025 நாளிட்ட தமிழ்நாடு முறைமன்ற நடுவ நோட்டீஸ் மற்றும் திரு. ஏ. செல்வராஜ் (எ) RTI செல்வம், சமூக ஆர்வலர் அவர்கள் என் மீது புகார் மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில், மண்டலம் 5–ல் வருவாய் துறையில் உரிமம் ஆய்வாளராக கோட்டம் 54 மற்றும் 56 ஆகிய கோட்டங்களில் பணிபுரிந்து வந்தேன்.

திருவாளர் கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் ரூ.63,020/– D.D. காசோலை கடந்த 11.09.2024 அன்று பெற்றுக் கொண்டு இந்நாள் வரை உரிமம் வழங்கவில்லை என கூறியதை மறுக்கிறேன். ஏனென்றால் தொழில்வரிக்கு மட்டும் காசோலை பற்று வைத்து, ரசீது அவர்களுக்கு அளித்துள்ளேன். ரசீது எண் 1744491 நாள் 21.01.2025.

மேலும் சந்திரா மோட்டார் பிரைவேட் லிமிடெட் மற்றும் ரப்பாளி ஆட்டோ ஸ்பேர்ஸ் ஆகியவர்களிடம் வரை ஓலை பெற்றுக்கு கொண்டு, மூன்று மாதங்கள் கடந்த நிலையில் அவர்கள் எங்களுக்கு பணமாக அனுப்பும்படி கூறியதில், இணைய வழியாக கூகுள் பே மூலம் அவர்களுடைய தொலைபேசி எண்களுக்கு பணமாக அனுப்பப்பட்டது. இதன் நகல் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் வணிகர்கள் (ம) நிறுவனங்கள் ரூ.10,000 முதல் 1,00,000/– வரை வரை ஓலை பெறப்பட்டுள்ளது என்ற புகாரை மறுக்கிறேன். திரு. செல்வராஜ் (எ) செல்வம் RTI சமூக ஆர்வலர் அவர்கள் வருவாய் துறையில் உள்ள ஆவணங்களை சட்டபடி விசாரணை செய்யும் போது, தக்க ஆதாரத்துடன் தாக்கல் செய்கிறேன் என மனுவில் கூறியது, மிகவும் வருந்தத்திற்குரியது. சமூக ஆர்வலராக இருக்கும் RTI செல்வம் அவர்கள் 9 மாதங்கள் ஆகியும் ஆவணங்களை வருவாய் துறை, மண்டலம் 5–க்கு ஏன் அளிக்கப்படவில்லை என தெரியவில்லை.

இந்நிலையில் வணிகர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட காசோலைகள் மற்றும் வரை ஓலைகள் மண்டலம் 5, வருவாய் துறையில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அலுவலகத்தில் 16.09.2024 அன்று காணாமல் போனது. மேலும் வணிகர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ரசீது தர வேண்டிய நிலையில், என்னுடைய மனைவியின் 16 கிராம் நகையை, முத்தூட் பைன் கார்ப், சைதாப்பேட்டை என்ற நிறுவனத்தில், அடகு வைத்து ரூ.60,000/– பெறப்பட்டு, மேற்காணும் வணிகர்கள் (ம) நிறுவனங்களுக்கு, ரசீது மற்றும் இணையவழி மூலமாக பணமாக அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

இதற்கான ஆவணங்கள் தங்களின் பார்வைக்கு சமர்ப்பித்து, திரு. செல்வராஜ் (எ) RTI செல்வம், சமூக ஆர்வலர் அவர்கள் என் மீது தவறாக புகார் மனு அளித்துள்ளதால், இவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில், சென்னை–2, பிளாக்கர்ஸ் ரோடு, எண் 1 என்ற முகவரியில் இயங்கும் கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் தனது 13.06.2025 நாளிட்ட கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்திற்கு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> "With reference to the complaint No.159/2025 dated 23.05.2025, I would like to state that I had given a DD in favour of Revenue Officer, Chennai Corportion on 4 September 2024 to Mr. K. Pandurangan, Tax collector, Chennai Corporation towards the Professional Tax arrears for my Travel Agency, GAIETY TRAVELS. I had received the receipts for the same paid till II/24-25 from the tax collector on 23 January 2025."

5. மனுதாரரின் மனு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டதற்கு, மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்ட உரிமம் ஆய்வாளர் திரு. பாண்டுரங்கன் என்பவர் 18.06.2025 நாளிட்ட கடிதத்தில் தனியரது விளக்கத்தினை அறிக்கையாக நேரடியாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளதால், மேற்படி அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலர் மூலம் அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 31.07.2025 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

6. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரர் 10.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"வார்டு எண்.54 மற்றும் 56ல் பணியாற்றி வரும் உரிமம் ஆய்வாளர், Gaiety Travels மூலமாக D.D ரூ.63,020/– Professional Tax செலுத்திவிட்டு இதுவரை அதற்கான ரசீதும், உரிமமும் அளிக்கவில்லை. மேலும், வார்டு எண்.63, பில் எண்.05908ற்கு இன்னால் வரை உரிமத்தை வழங்காமல் உரிம ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் ஏமாற்றி வருகிறார்கள். Nahibkhlan மற்றும் Peer Mohammed அல்லாமல் Chandra Motors Pvt.Ltd., Rabbani Auto Stores, Thameem Audio Spare, Advik Automobiles, S.Sheik Mathax, Abdul Nazeer, P.Bilal போன்ற நிறுவனங்களில் இருந்து உரிமம் வழங்குவதாக கூறி ரூ.10,000/– முதல் 1,00,000/– வரை பெற்று உரிமம் வழங்காமலும் மேலும், சிலருக்கு போலியான உரிமத்தை தயார் செய்து வழங்கி வருகிறார்கள். மேலும், 53வது வார்டு சுதாகுமாரி உரிமம் ஆய்வாளர் மற்றும் அவர் மகள் நிவேதா அவர் கணவர் சுரேஷ் ஆகியோர் போலி உரிமம் மற்றும் அரசு சீல் ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி பல நிறுவனங்களிடமிருந்து பணம் பெற்றுள்ளார்கள்.

எனவே, தொழில் உரிமம் வழங்குவதாக கூறி பணம் பெற்றுக்கொண்டும், போலியான உரிமங்கள் வழங்கிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5ன் உரிமம் ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர்அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5 அலுவலகத்திலிருந்து 10.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு எந்த அலுவலரும் ஆஜராகவில்லை மற்றும் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

9. எனவே, மேற்கண்ட மனுதாரரின் மனு தொடர்பாக, எதிர்மனுதாரர் தரப்பில் தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெறும்

விசாரணைக்கு ஆஜராகுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலருக்கு 22.12.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, மனுதாரருக்கும் நகலிடப்பட்டது.

10. மனுதாரர் 7.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற தொடர் விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“நான் ஏற்கனவே 10.12.2025 அன்று அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, முறைகேடாக நிறுவனங்களை ஏமாற்றி பணம் வசூல் செய்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் சம்மந்தப்பட்ட உரிமம் ஆய்வாளர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் வார்டு எண்.53வது சுதாகுமாரி, உரிமம் ஆய்வாளர் ஆகியோர் மீதும் உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் முறைகேடுகள் நடைபெறுகிறது என்பதற்கு உதாரணமாக உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.நீதிபதி ரூ.7கோடி ஊழல் சம்மந்தமாக நிகழ்வில் கைது செய்யப்பட்டார். ஆனால், அவர் மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் பணி அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். போலியான உரிமம் வழங்குவது சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் சுமார் ரூ.20 கோடிக்கு ஊழல் நடைபெற்றுள்ளது.

எனவே, மேலே நான் கூறியவாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் சம்மந்தப்பட்ட உரிமம் ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் ஆய்வாளர் மற்றும் போலி நபர்கள் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்றேன். இதற்கான ஆதார நகல்களை சமர்ப்பிக்கின்றேன்.”

11. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் தற்போது மண்டலம் 13–ல் உரிமம் ஆய்வாளர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“திருவாளர்கள் கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் ரூ.63,020/–க்கான D.D.-ஐ மனுதாரர் தெரிவித்தவாறு, நான் பெறவில்லை. ஆனால் ரூ 43,250/– D.D. மட்டும் பெற்று அதற்கான 21.01.2025 நாளிட்ட ரசீதினை அளித்து விட்டேன்.

வணிகர்கள் (ம) நிறுவனங்களில் ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரை வரைவோலை பெற்றேன் என்று தவறான தகவல் அளித்துள்ளார். இந்நிலையில் வணிகர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட காசோலைகள் மற்றும் வரைவோலைகள் மண்டலம் 5, வருவாய் துறை பதிவுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அலுவலகத்தில் 01.09.2024 காணாமல் போய் உள்ளது. மேலும் வணிகர்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கு ரசீது தர வேண்டிய நிலையில், என்னுடைய மனைவியின் 16 கிராம் நகையை முத்தூட் பைன் கார்ப், சைதாப்பேட்டை, நிறுவனத்தில் அடகு வைத்து ரூ.60,000/– பெறப்பட்டு மேற்காணும் வணிகர் (ம) நிறுவனத்திற்கு, ரசீது மற்றும் இணைய வழி மூலமாக பணமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.ஏ. செல்வராஜ் என்பவர் என் மீது ஆதாரமற்ற புகாரை அளித்துள்ளதால் மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.”

12. மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள் மற்றும் சென்னை–2, பிளாக்கர்ஸ் ரோடு, கெயிட்டி டிராவல்ஸ் நிறுவன உரிமையாளரின் கடிதம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் தரப்பில் தற்போது மண்டலம் 13–ல் உரிமம் ஆய்வாளராகப் பணிபுரியும் திரு. K. பாண்டுரங்கன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

வார்டு எண்.54 மற்றும் 56ல் பணியாற்றி வரும் உரிமம் ஆய்வாளர், Gaiety Travels மூலமாக D.D ரூ.63,020/– Professional Tax செலுத்தியதற்கு, ரசீது மற்றும் உரிமம் அளிக்கவில்லை என்பதும், Nahibkhlan மற்றும் Peer Mohammed அல்லாமல் Chandra Motors Pvt.Ltd., Rabbani Auto Store, Thameem Audio Spare, Advik Auto Mobiles, S.Sheik Mathax, Abdul Nazeer, P.Bilal போன்ற நிறுவனங்களில் இருந்து ரூ.10,000/– முதல் 1,00,000/– வரை பெற்று உரிமம் வழங்காமலும் மற்றும், சிலருக்கு போலியான உரிமத்தை தயார் செய்து வழங்கப்பட்டுள்ளது என்பதும், 53வது வார்டு உரிமம் ஆய்வாளர் சுதாகுமாரி மற்றும் அவரது மகள் மற்றும் கணவர் ஆகியோர் போலி உரிமம் மற்றும் அரசு சீல் ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி பல நிறுவனங்களிடமிருந்து பணம் பெறப்பட்டுள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் முறைகேடுகள் நடைபெறுகிறது என்பதற்கு உதாரணமாக உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.நீதிபதி என்பவர் ரூ.7கோடி ஊழல் சம்மந்தமான நிகழ்வில் கைது செய்யப்பட்டு, மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் பணி அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்பதும், போலியான உரிமம் வழங்குவது சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் சுமார் ரூ.20 கோடிக்கு ஊழல் நடைபெற்றுள்ளது என்பதும், இவ்வாறு தொழில் உரிமம் வழங்குவதாக கூறி பணம் பெற்றுக்கொண்டும், போலியான உரிமங்கள் வழங்கிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5ன் உரிமம் ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வார்டு எண்.53வது உரிமம் ஆய்வாளர் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரரின் மனு மற்றும் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

தாங்கள் செலுத்த வேண்டிய தொழில் வரிக்கான நிலுவைத் தொகைக்கான வரைவோலை வரி வசூலிப்பவரிடம் செலுத்தி அதற்கான ரசீது பெற்று கொள்ளப்பட்டது என்பது கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவன உரிமையாளரின் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

திருவாளர்கள் கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் ரூ.63,020/–க்கானD.D.-ஐ மனுதாரர் தெரிவித்தவாறு, உரிமம் ஆய்வாளர் திரு. பாண்டுரங்கன் என்பவர் பெறவில்லை என்பதும், ஆனால் ரூ 43,250/– D.D. மட்டும் பெற்று அதற்கான 21.01.2025 நாளிட்ட ரசீதினை அளிக்கப்பட்டுள்ளது என்பதும், வணிகர்கள் (ம) நிறுவனங்களிடமிருந்து ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரை வரைவோலை பெற்றதாக மனுதாரர் தெரிவித்திருப்பது தவறானது என்பதும், இந்நிலையில் வணிகர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட காசோலைகள் மற்றும் வரைவோலைகள் மண்டலம் 5, வருவாய் துறை பதிவுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அலுவலகத்தில் 01.09.2024 அன்று காணாமல் போனதால், தன்னுடைய மனைவியின் 16 கிராம் நகையை சைதாப்பேட்டையில் உள்ள முத்தூட் பைன் கார்ப் நிறுவனத்தில் அடகு வைத்து ரூ.60,000/–ஐ மேற்காணும் வணிகர்கள் (ம) நிறுவனத்திற்கு ரசீது மற்றும் இணைய வழி மூலமாக பணமாக வழங்கப்பட்டுள்ளது என்பதும், எனவே, திரு.ஏ. செல்வராஜ் என்பவர் தன் மீது ஆதாரமற்ற புகாரை அளித்துள்ளதால் மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் முன்னாள் உரிமம் ஆய்வாளர் மற்றும் தற்போது மண்டலம் 13–ன் உரிமம் ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், திருவாளர்கள் கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் ரூ.63,020/–க்கான D.D.-ஐ மனுதாரர் தெரிவித்தவாறு, தற்போது மண்டலம் 13–ல் பணிபுரியும் உரிமம் ஆய்வாளர் திரு. பாண்டுரங்கன் என்பவர் தான் பெறவில்லை என்பதும், ஆனால் ரூ 43,250/– D.D. மட்டும் பெற்று அதற்கான ரசீதினை அளிக்கப்பட்டுள்ளது என்பதும், வணிகர்கள் (ம) நிறுவனங்களிடமிருந்து ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரை வரைவோலை பெற்றதாக மனுதாரர் தெரிவித்திருப்பது தவறான தகவல் என்றும், இந்நிலையில் வணிகர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட காசோலைகள் மற்றும் வரைவோலைகள் மண்டலம் 5, வருவாய் துறை பதிவுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அலுவலகத்தில் காணாமல் போய், தன்னுடைய மனைவியின் 16 கிராம் நகையை சைதாப்பேட்டை முத்தூட் பைன் கார்ப் நிறுவனத்தில் அடகு வைத்து ரூ.60,000/– பெறப்பட்ட தொகையினைக் கொண்டு மேற்காணும் வணிகர்கள் (ம) நிறுவனத்திற்கு ரசீது மற்றும் இணைய வழி மூலமாக பணமாக வழங்கப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி

முன்னாள் உரிமம் ஆய்வாளர் மற்றும் தற்போது மண்டலம் 13—ன் உரிமம் ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், கெயிட்டி டிராவல்ஸ் என்ற நிறுவன உரிமையாளர் தாங்கள் பெறவேண்டிய நிலுவைத் தொகையினை பெற்று அதற்கான ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தாலும், மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள நிறுவனங்கள் தொடர்பான ஆவணங்களை உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மூலம் ஆய்வு மேற்கொண்டு, அத்துறையின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், 53வது வார்டு உரிமம் ஆய்வாளர் சுதாகுமாரி மற்றும் அவரது மகள் மற்றும் கணவர் ஆகியோர் போலி உரிமம் மற்றும் அரசு சீல் ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி பல நிறுவனங்களிடமிருந்து பணம் பெற்று முறைகேடுகள் செய்வதாக தெரிவிக்கப்பட்ட புகார் தொடர்பாக மனுதாரர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு முறையான வாய்ப்பளித்து விசாரணை மேற்கொண்டு புகாரில் முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டால் உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மண்டலம் 5—ன் உதவி ஆணையரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு ஏ. செல்வராஜ் என்கிற RTI செல்வம்,
கதவு எண் 32/33,
வ.வ.சி. தெரு, கோவிந்தசாமி நகர்,
கொருக்குப்பேட்டை, சென்னை—600 021.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3 மண்டல அலுவலர், மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 62 பேசின் பாலம் சாலை, சென்னை 600 021.

(4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,
671, அண்ணா சாலை,
நந்தனம், சென்னை—600 035.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை—600 032